ஆதிக்கத்தை மேலிடத்திற்கு விளக்கி பல பக்கங்களில் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு கட்சியிலிருந்து விலகி உள்ளார்.

திருநெல்வேலி பாராளுமன்றத் தொகுதியில் கணிசமாக பிள்ளைமார் சமூகத் தினர் இருந்தும், அவர்களில் ஒருவருக்குக்கூட மாவட்டப் பொறுப்பு வழங்கவில்லை. அதுமட்டுமின்றி, ஏற்கென வே இருந்த மாவட்ட பொதுச் செயலாளர் பதவியும் பறிக்கப்பட்டதால் வக்கீல் குற்ற ாலநாதன் இந்து முன்னணிக்கு சென்றுவிட்டார்.

அதுபோல குறிப்பிட்ட ஒரு சில நிர்வாகிகள், கீழே உள்ள நிர்வாகிகளை வளர விடுவதில்லை; செயல்பட விடுவதில்லை; அவர்களைத் தவிர யாரையும் ஐந்து வருடத்திற்கு மேல் கட்சியில் நீடிக்க விடுவதில்லை எனக் கூறி இவர்களது ஜாதீய போக்கைக் கண்டித்து மாவட்ட இளைஞரணி தலைவராக இருந்த பிராமண சமூகத்தைச் சார்ந்த வக்கீல் பாலாஜி, கட்சியிலிருந்து விலகி இந்து முன்னணி மாவட்டத் தலைவராகி உள்ளார்.

திருநெல்வேலி மாவட்ட பொதுச்செயலாளராக இருந்த, பிள்ளைமார் சமூகத்தைச் சார்ந்த பிச்சைமணி, இப்போது எந்தப் பதவியும் வழங்கப்படாமல் ஓரம் கட்டப்பட்டுள்ளார்.

வழக்கமாக, ஒரு தடவை மாவட்டத் தலைவராக இருப்பவர் அடுத்த தடவை மாநிலப் பார்வையாளராக நியமிக்கப்படுவது வழக்கம். அந்த அடிப்படையில் மாநிலப் பார்வையாளராக நியமிக்கப்பட வேண்டிய தேவர் சமூகத்தைச் சார்ந்த பாலசுப்பிரமணியனுக்கு மாநில செயற்குழு உறுப்பினர் பதவி கொடுத்து டம்மியாக்கி விட்டார்கள். அவருக்குப் பதில் நாடார் சமூகத்தைச் சார்ந்த அன்புராஜ் மீண்டும் மாநிலப் பார்வையாளர் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளார். இதன ால், பாலசுப்பிரமணியன் மிகுந்த அதிருப்தியில் உள்ளார்.

குமரி மாவட்டத்தில் இந்து நாடார் சமூகத்தின ருக்கு அடுத்தபடியாக இந்து வெள்ளாளர் சமூகத்தின ர் அதிகமாக உள்ளனர். இந்நிலையில், அவர்களது ஓட்டுகளை மட்டும் ‘இந்து இந்து’ என்று சொல்லி வாங்கிக்கொண்டு, அதைத் தக்க வைக்க அந்த சமூகத்தினர் ஒரு சிலருக்கு டம்மி பொறுப்புகளைக் கொடுத்துவிட்டு, நாடார் சமூகத்தினரே முக்கியப் பொறுப்புகளை வகித்து வருகின்றனர்.

கட்சிக்கு எந்த சம்பந்தமும் இல்லாத மீனா தேவ், நாகர்கோயில் நகராட்சி சேர்மனாக நியமிக்கப்பட்டார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மாநில பொதுச் செயலாளர், மாவட்டத் தலைவர் என 10 பேர் மட்டுமே கட்சியில் இருப்பதாலும், அவர்களும் ஒரே சமூகத்தின ராய் இருப்பதாலும் பிரச்சினையில்லை. ஏனெனில் பிற சமூகத்தைச் சார்ந்த சண்முகசுந்தரம், கணபதி சந்தானம் என்று பலரும் ஏற்கெனவே ஓரம் கட்டப்பட்டு விட்டனர்.

குமரி மாவட்டத்தில் வெள்ளாளர் சமூகத்தைச் சார்ந்த, இந்து இயக்கத்தின் முதல் தமிழக எம்.எல்.ஏ. பாலசந்தர், முன்னாள் எம்.எல்.ஏ. வேலாயுதன், அ.தி.மு.க.வில் இருந்துபின்ன ர் பி.ஜே.பி.யில் இணைந்த முத்துகிருஷ்ணபிள்ளை. கன்னியாகுமரியில் எம்.எல்.ஏ. வேட்பாளராக இருந்த கிருஷ்ணபிள்ளை, நாகர்கோயில் நகர சேர்மன ாக பி.ஜே.பி. சார்பில் போட்டியிட்டு மிக சொற்ப ஓட்டில் தோற்ற முதலியார் சமூகத்தைச் சார்ந்த பெண்மணி என ஓரங்கப்பட்டவர்கள் அதிகம் அதிகம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் வெள்ளாளர் சமூகத்தைச் சார்ந்த ஆறுமுக நயினார், சாஸ்தா மணிகண்டன், கவுன்சிலர் சங்கர், சங்கர

> “முக்கியமானவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு ‘பாரதத்தை உலகின் குருவாக ஆக்க வேண்டும்’ என இவர்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை.”